1971 அக்டோபர் 23]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருத்துவ மனைகளுக்கு வழங்கப்படுகிற மருந்துகளைக் குறித்து தொடர்ந்து ஆராயப்படவேண்டிய ஒரு நிலை இருக்கிறது. மருத்துவ மனைகளில் ஆகிற செலவில் முக்கால் பங்குச் செலவு மருந்துகளுக்காக ஆகிறது. எல்லோருக்கும் தேவைப்படுகிற மருந்துகள் 20 விழுக்காடு செலவிற்கு வருகிறது. சிலருக்குத் தேவைப்படுகிற மருந்துகள் 5 விழுக்காடு என்ற நிலையில் இருக்கிறது. மிகச் சிலருக்குத் தேவைப்படுகிற மருந்துகள் இருக்கின்றன. மிகமிகச் சிலருக்குத் தேவைப்படும் மருந்துகளுக்கு அவற்றை வாங்கி வைத்துக்கொள்ள அதிகச் செலவு ஆகிறது. அந்தச் சில மருந்துகள், அதிகத் தொகையை விழுங்கி விடுகிறது. ஆகவே, அப்போதைக் கப்போது, தேவைப்படுகிற நேரத்தில், இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தேவைக்கேற்ப, நிலைமைக்கேற்பத்தான் வாங்க முடியுமே தவிர அவை எல்லாக் காலத்திலும் வாங்கி வைக்க இயலாதவை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திருப்பூர் அரிசன மாணவ விடுதிகளுக்கு வானொலிப்பெட்டி

* 36. **வினா.—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் உள்ள அரசினர் மாணவர், மாணவியர் அரிசன விடுதிக்கு வானொலிப் பெட்டி வழங்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. சு. துரைசாமி : திருப்பூர் அரசினர் மாணவர், மாணவியர் விடுதிகளில் வானொலிப் பெட்டிகள் கொடுப்பதன் மூலம் வானொலி மூலம் கற்பிக்கப்படுகிற பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். அதோடு அவர்களது பொது அறிவையும் பெருக்கிக் கொள்ள அது உதவியாக இருக்கும். ஆகவே அரசினர் மாணவர், மாணவியர் விடுதிகளுக்கு வானொலிப் பெட்டிகள் வாங்கி வழங்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாணவர்கள் விடுதிகளுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்குவது என்பது பொதுக் கொள்கை. ஒரு கொள்கை என்றால் எல்லாவிடங்களிலும் வைக்க ஆலோசிக்கவேண்டும். வானொலிப் பெட்டிகள் வைத்தால் அவர்கள் இசையைக் கேட்டுக்கொண்டு நேரத்தினைக் கழித்து விடுவார்கள். பொதுமக்களின் வசதிக்காக வைப்பது வேறு. ஆனால் விடுதிகளில் வைப்பது அவ்வளவு சரியான கருத்து அல்ல.

செங்கற்பட்டு மாவட்டத்தில் புது வருவாய்க் கோட்டம்

* 37. **வினா.—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில், பொன்னேரி வட்டம், கும்முடிப்பூண்டித் துணை வட்டம், பென்னலூர்பேட்டைத் துணை வட்டம் ஆகியவற்றை இணைத்து தனிக் கோட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : ஆந்திர மாநிலத்தின் ஓரத்தில் இருக்கிற பொன்னேரி வட்டம், கும்முடிப்பூண்டித் துணை வட்டம், பென்னலூர்ப் பேட்டைத் துணை வட்டம் ஆகியவற்றை ஒன்றாக இணைத்து ஒரு கோட்டமாக அமைக்கலாம் என்று முன்னால் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு யோசனை சொல்லியிருந்தார்கள். ஏனெனில் அந்தப் பகுதிகளிலிருந்து தலைநகரத்திற்கு, எண்பது மைல்களுக்கு அப்பாலுள்ள காஞ்சீபுரத்திற்கு வரவேண்டியிருக்கிறது. கலெக்டர் அலுவலகத்திற்கு வருவதற்கு அவர்கள் காஞ்சீபுரம் வர வேண்டியிருக்கிறது. ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு வரவேண்டுமென்றால் சென்னைக்கு வரவேண்டியிருக்கிறது. ஆகவே அந்தப் பகுதிகளை இணைத்து ஒரு தனிக் கோட்டமாக அமைக்க முடியாவிட்டாலும் சென்னை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தோடு அந்தப் பகுதிகள் இணைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பொன்னேரி வட்டம், கும்முடிப் பூண்டித் துணை வட்டம் சைதாப்பேட்டை ரெவின்யூ டிவிஷனோடு ஏற்கனவே சேர்க்கப்பட்டிருக்கிறது. Pennalurpettai Sub-taluk has been included in Tiruvellore Revenue division இரண்டையும் சேர்த்து தனியாக ஒரு ரெவின்யூ டிவிஷனாக ஆக்கும் செயற்குறிப்பு தற்சமயம் அரசாங்கத்தின் யோசனையில் இல்லை.

திரு. நா. வீராசாமி : இப்போது அப்படிப்பட்ட நிலைமை எதுவும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள் இவைகள் எல்லாம் எப்போதோ நூறு ஆண்டுகளுக்கு முன்னமேயே பிரிக்கப்பட்டவைகளாகும். இப்போது மக்கள் தொகை உயர்ந்திருக்கிறது. வருவாய் தொகையும் உயர்ந்திருக்கிறது. இதை அடிப் படையாகக் கொண்டு—சமீபத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தினையும் ஒரு தாலுக்காவாக ஆக்குகிற நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறதா ? ஒவ்வொரு தாலுக்காவையும் ஒவ்வொரு ரெவின்யூ டிவிஷனாக எதிர்காலத்தில் பிரிக்கக்கூடிய செயற்குறிப்பு அரசாங்கத்தினிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒவ்வொரு தாலுக்காவையும் ரெவின்யூ டிவிஷனாக அமைப்பதற்கு, அதைப் பற்றி பரிசீலித்து ஆலோசனை கூறுமாறு நிர்வாகச் சீர்திருத்தக் குழுவிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களது ஆலோசனை வந்ததற்குப் பின்னால் பரிசீலித்து முடிவுகள் எடுக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : தனிக் கோட்டமாக அமைக்க முடியா விட்டாலும் அந்தப் பகுதி மக்கள் 80 மைல் வந்து, காஞ்சீபுரத்திற்கு வந்து தான் கலெக்டரைப் பார்க்க முடிகிறது. ஆகவே மாவட்டங்கள் சீர்திருத்தி அமைக்கப்படுகிற வரையில், குறைந்தபட்சம் சென்னை கலெக்டர் அலுவலகத்தோடு அந்தப் பகுதிகள் இணைக்கப்படுமா ? என்று மீண்டும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாவட்டங்கள் சீர்திருத்தி அமைக்கிற நேரத்தில் இந்த யோசனை பரிசீலிக்கப்படும்.